# 4. மொழியியல் திறனாய்வு

முன்னுரை-மொழியியல் திறனாய்வும் ரோமன் யாக்கப்சனும் ஹபெர்டினண்ட் தெ சசூரும் மொழியியல் கோட்பாடும்-புதைவடிவம்-புறவடிவம்-மக்கள் மொழியா? இலக்கிய மொழியா?- மூலப்பாட ஆய்வும் மொழியியல் அணுகுமுறையும்- இலக்கியமும் வரலாற்று மொழியியலும்-இலக்கியமும் சமூக மொழியியலும்.

## முன்னுரை

கல்லைச் செதுக்கும் நுட்பத்தினால் சிற்பம் கிடைப்பது போல, மொழியைப் பயன்படுத்தும் திறமையினால் இலக்கியம் பிறக்கிறது. அதாவது மொழியியல் அணுகுமுறையின்படி இலக்கியம் என்பது அதன் மொழியைத் தவிர வேறல்ல. எ.ஃப் டபிள்யூ.பாற்றீசன் 'இலக்கியம், மொழி வரலாற்றின் ஒரு பகுதி' என்றும் "அதனையே முற்றிலும் சார்ந்திருக்கிறது" என்றும் விரிவாக விவாதிக்கிறார்[1]. இலக்கியத்தின் மொழியை முதன்மைப்படுத்தும் இத்தகைய அணுகுமுறையின் விளைவாகத்தான் நடையியல் (Stylistics) என்கிற திறனாய்வு முறையும் கோட்பாட்டுத் தளத்தில் உருவாகியுள்ளது. எந்த ஒரு படைப்பாளியும் பொதுவான மொழியிலிருந்து விலகித் தனக்கேயான ஒரு மொழிநடையைக் கண்டுபிடித்துக் கொள்ளத் தவறினால் அவரது இலக்கியப் படைப்பு வெற்றி பெறுவது என்பதே அரிதுதான். இந்த நடைதான் ஒவ்வொரு படைப்பாளியையும் அடையாளப்படுத்தும் முகமாக அமைகிறது. இதனாலேதான் இலக்கிய வரலாற்றில் தனி மனிதர்களை வகைப்படுத்தித் திரு.வி.க நடை, மறைமலையடிகள் நடை, அண்ணாதுரை நடை என்றும், காலத்தைப் பயன்படுத்திச் சங்க இலக்கிய நடை, 19-ஆம் நூற்றாண்டுத் தமிழ் நடை என்றும், சமூக இயக்கங்களை முன்னிறுத்தித் திராவிட இயக்கத்தினர் நடை, பொதுவுடைமை இயக்கத்தினர் நடை என்றும் இலக்கியம் விளக்கமுறும் தன்மையைப் பார்க்கிறோம். இவ்வாறு இலக்கியத்திற்கும் மொழிக்குமான உறவென்பது

வெளிப்படையானது; அதேநேரத்தில் நுட்பமானது என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும். உருசியாவின் மிகச்சிறந்த, எழுத்தாளர்களில் ஒருவராகக் கருதப்படும் அலெக்சி டால்ஸ்டாய் இப்படி ஓரிடத்தில் தனது படைப்பு அனுபவத்தைப் பதிவு செய்கிறார்:-

> சில சமயங்களில் ஒரு சொற்றொடரிலிருந்து ஒரு கதாபாத்திரமே உருவாகி விடுகிறது"

இந்தக் கூற்றிலிருந்து மொழிக்குப் படைப்பாக்கத் தளத்திற்கும் இருக்கும் மிக நுட்பமான உறவினைப் புரிந்து கொள்ள முடியுமல்லவா? இன்னொன்றையும் அவர் கூறுகிறார். ஒரே நேரத்தில் மொழியானது "இரட்டைச் செயல்" செய்கிற கருவியாகப் பயன்படுகிறது; அதாவது முதற்கண் மனிதர்களின் அல்லது படைப்பாளிகளின் கலை பூர்வமான சிந்தனைக்கு மொழிதான் 'உருவம்' கொடுக்கிறது. இரண்டாவதாக, அவ்வாறு உருவம் கொடுத்த பின்னர், மேலும் மேலும் அதனைப் படைப்பாளியிடமோ வாசகனிடமோ தூண்டுகிற ஒரு சக்தியாகவும் விளங்குகிறது. எனவே இலக்கியக் கல்வி என்பது மொழியியல் சார்ந்தது என்பது உறுதியாகிறது.

## மொழியியல் திறனாய்வும் ரோமன் யாக்கப்சனும்

தமிழில், தொல்காப்பியர் இலக்கியத்தின் கூறுகளாக எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய அனைத்தையும் கற்பதே சரியான இலக்கியக் கல்வி என்ற அணுகுமுறையைக் கொண்டிருந்தார் என்பதனாலேயே அனைத்தையும் 'தொல்காப்பியம்' என்ற ஒரே பனுவலின் கீழ் ஆராய்கிறார் எனக் கருதலாம். மேலும் அவர் செய்யுளியலில் செய்யுளுக்கான 34 உறுப்புக்களை அடுக்கிக் கூறும் போதும், மரபியலில் சொற்களைக் குறித்து விளக்கும் போதும் அவருடைய இந்த மொழி சார்ந்த இலக்கிய அணுகுமுறை தெளிவாகப் புலப்படுகிறது. தொடர்ந்து தமிழ் மரபில் இலக்கிய நயத்தை விளக்கியுரைக்க முயன்ற உரையாசிரியர்கள் அனைவருமே இலக்கணக் குறிப்புகள் வழங்குதல் என்பதை ஒரு மரபாகவே கொண்டு வந்துள்ளனர் என்பதையும் அறிய முடிகிறது. மொழிக்கான இலக்கண விதிகளைப் படைப்பாளி மீறி இருப்பது போலத் தோன்றுகின்ற இடங்களில் அவைகளையும் "வழுவமைதி" எனக்கொண்டு மொழியமைப்பிற்குள் இணைத்திருக்கும் பாங்கினை அறியலாம். இடைக்காலத்தில் செல்வாக்கோடு விளங்கிய யாப்பிலக்கணக் கோட்பாடுகளும் அணியிலக்கணக் கோட்பாடுகளும் எந்த அளவிற்கு

இலக்கியம், மொழியின் ஒழுங்கமைப்பிற்குள் நின்று இயங்கக் கூடியது என்பதையே புலப்படுத்துவனவாக அமைந்துள்ளன என்றாலும் இன்று நாம் பார்க்கின்ற மொழியியல் திறனாய்வு அணுகுமுறை பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றி இருபதாம் நூற்றாண்டில் உலகம் முழுவதும் செழிப்புடன் வளர்ந்த மொழியியல் (Lingustics) என்ற தனித்துறையின் வளர்ச்சியோடு தொடர்புடையது என்பதைப் பிரித்தறிந்து கொள்ள வேண்டும். 1960-களில் மொழியியல் கல்வி இலக்கியத் திறனாய்வின் அணுகுமுறைக்கு வளம் சேர்ப்பதாக அமைந்தது. குறிப்பாக, உருசியாவில் விளங்கிய உருவவியல் கோட்பாட்டாளரும் நாடு பெயர்ந்தவருமான ரோமன் யாக்கப்சன் எழுதிய "மொழியியலும் கவிதையியலும்" என்ற கட்டுரை மொழியியல் திறனாய்வு செழித்து வளர வாய்ப்பாக அமைந்தது. யாக்கப்சன் வழங்கிய ஒரு வரைபடம் மொழியின் செயல்பாட்டிற்குள், மனித நடவடிக்கைகள் இயங்கிக் கொண்டிருக்கும் பாங்கினை வெளிக்கொணர்வதாக இருக்கிறது. அந்த வரைபடம் இதுதான்.

| | | |
|---|---|---|
| | - சந்தர்ப்பம் (Context) | |
| | - செய்தி (Message) | |
| தகவல் அனுப்புநர் (Addresser) | - தொடர்பு (Contact) | தகவல் பெறுநர் (Addresse) |
| | - மொழி ஒழுங்கமைவு (Code) | |

சாதாரணமாக, மொழி பேசப்படும்பொழுதும் கேட்கப்படும்பொழுதும் தகவல் பரிமாற்றத்தில் நிகழும் வினைகளை (Functions) யாக்கப்சன் இவ்வாறு வரைபடம் மூலம் காட்டுகிறார். இந்த வரைபடத்தை அப்படியே படைப்பாக்கத் தளத்தில் நிகழ்கிற வினைகளை விளக்குவதற்கும் பயன்படுத்தினார்.

| | | |
|---|---|---|
| | - சந்தர்ப்பம் (Context) | |
| | - இலக்கியப் பிரதி (Writing) | |
| எழுத்தாளர் (Writer) | - தொடர்பு (Contact) | தகவல் பெறுநர் (அ) வாசகர் (Addresse) |
| | - மொழி ஒழுங்கமைவு (Code) | |

யாக்கப்சனின் கருத்துப்படி, படைப்பாக்கத் தளத்தில் நிகழ்கின்ற, மேற்கண்ட ஒவ்வொரு வினையிலும் ஏதாவது ஒரு வகையில் மொழி தனது செயல்பாட்டை நிகழ்த்திக் கொண்டே இருக்கிறது. இதை எளிமையாகப் புரிந்து கொள்ள இவ்வாறு விளக்கலாம்; அதாவது.

1. படைப்பாளியின் படைப்பு மனம் மொழியால் ஆனது.

2. அவர் எழுத நினைக்கும் கருத்து, சமூகச் சந்தர்ப்பம் அல்லது சூழலால் பிறப்பது. எனவே கருத்தும் அந்தச் சமூகத்தின் மொழியமைப்பிலிருந்து பிறப்பது.

3. அந்தக் கருத்து இலக்கியப் பிரதியாகும் போது மொழிதான் அந்தப் பிரதியை நிர்ணயிக்கிறது. அந்தப் பிரதிக்குப் பயன்படுத்தப்படும் மொழி பலவிதமான ஒழுங்கமைதிகளைத் (Code) தன்னுள் கொண்டிருப்பது.

4. படிக்கின்ற வாசகருக்குள்ளும் மொழிதான் வினைபுரிகிறது.

இவ்வாறு இலக்கியச் செயல்பாடு அனைத்தையும் மொழியின் செயல்பாடாகப் பார்க்கிற பார்வையை யாக்கப்பசனின் மொழியியல் கோட்பாடு வளர்த்தெடுத்தது.

## பெர்டினண்ட் தெ சசூரும் மொழியியல் கோட்பாடும்

எழுபதுகளில் அமைப்பியல்வாதம் (Structuralism) செல்வாக்குப் பெற்ற போது இலக்கியம் என்பது வேறொன்றுமில்லை, மொழியின் விளையாட்டுதான் என்ற கருத்து ஆழமாக வேரூன்றத் தொடங்கிவிட்டது. இலக்கியத்தில் அமைப்பியல்வாதம் தோன்றுவதற்கு ஆதாரமான மொழியியல் சிந்தனைகளை வழங்கிய பெர்டினண்ட் தெ சசூரின் கருத்துப்படி, ஆதியில் சொல் இருந்தது. எழுத்தாளருக்கு முன்பே சொல் இருக்கிறது. எனவே சொல்லில் இருந்துதான் இலக்கியப் பிரதி (Text) உருவாகிறது என்பது வெளிப்படை. ஏனென்றால் எழுத்தாளரே, அவருக்கு முன்பே இருந்து வரும் சொல்லில் இருந்துதான் உருவானவர். இந்தக் கருதுகோளின் அடிப்படையில், மொழி யதார்த்தத்தைப் பிரதிபலிக்கிறது என்ற பழைய மரபார்ந்த பார்வை தலைகீழாக்கப்பட்டு, மொழியின் அமைப்புதான் யதார்த்தத்தையே உருவாக்குகிறது என்ற கருத்து வலுப்பெற்றது. இதை இன்னொரு விதமாகச் சொன்னால், அர்த்தத்தின் உறைவிடம், வாழ்வில் படைப்பாளி பெறும் அனுபவம் அல்ல; மாறாக, மொழி எந்த விதிமுறைகளின் கீழ் செயலாற்றுகிறதோ, அந்த விதிமுறைகளே, அர்த்தத்தை நிர்ணயிக்கின்றன. அதாவது, மனிதர்கள் மொழியைப் பேசவில்லை. மொழிதான் மனிதர்களைப் பேசுகிறது என்று அமைப்பியல் முன்மொழிகிறது. இத்தகைய நவீனச் சூழலில் இன்று, இலக்கியத்தை விளக்குவது என்பது மொழியை விளக்க முயல்வது என்றாகி இருக்கிறது. இவ்வாறு இலக்கியத்தில் மொழியியல்

அணுகுமுறை அமைப்பியல்வாதம் மூலமாக முதன்மையிடத்தைப் பெற்று விளங்குகிறது.

பெர்டினண்ட் தெ சசூர் (1857-1913) இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் நிலவிய மொழியியல் போக்குகளைத் தன்னுடைய மொழி குறித்த ஆய்வுகள் மூலம் பெரிதும் மாற்றத்திற்கு உள்ளாக்கினார். அவர் மொழியியல் குறித்துப் புத்தகமாக எதையும் வெளியிடவில்லை என்றாலும் தன்னுடைய ஐம்பத்தைந்து வயதில் இறந்த பிறகு 1916-இல் "பொது மொழியியலின் செல்திசை" (The Course in General Lingustics) என்ற நூல் அவர் பெயரில் வெளிவந்தது. அது அவர் தன் மாணவர்களுக்குக் கொடுத்த குறிப்புகளின் தொகுதியாகும். இந்த நூல் மூலமாக சுவிட்சர்லாந்து நாட்டின் அறிவாளியாகிய இவர், "நவீன மொழியியலின் தந்தையாக" அறியப்பட்டார். 1880-இல் பெர்லினில் தனது முனைவர்பட்ட ஆய்வை முடித்த பிறகு பாரிசில் உள்ள உயர் கல்வி மையத்தில் விரிவுரையாளராகச் சேர்ந்தார். அங்கே சமஸ்கிருதம் உட்படப் பல மொழிகளைக் கற்பித்தார். 1991-இல் ஜெனிவா பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருந்து இறுதிவரைப் பணியாற்றினார். அவருக்கு முந்திய மொழியியல்வாதிகளின் செயல்பாட்டில் குறைகண்டு புதிய மொழியியல் கோட்பாடுகளை நோக்கி நகர்ந்தார். அவருக்கு முந்திய மொழியியல் அறிஞர்கள் ஒவ்வொரு சொல்லுக்கும், அது குறிக்கும் பொருளுக்கும் காரண காரியத் தொடர்பு இருப்பதாக விளக்கிக் கொண்டு இருந்தனர். ஆனால் சசூரோ மொழிக்கும் அது குறிக்கும் சொல்லுக்கும் எந்தவித காரண காரியத் தொடர்பும் இல்லை என்றார். தமிழ் மரபில் சொல்வதென்றால் ஒவ்வொரு சொல்லும் இடுகுறித்தன்மை கொண்டவை என விளக்கினார். 'நண்' என்ற சொல்லுக்கும் அது குறிக்கும் அந்தப் பொருளுக்கும் நேரடியாக எந்தத் தொடர்பும் இல்லை. பிறகு எவ்வாறு அந்தச் சொல் அந்தப் பொருளைக் குறிக்கிறது என்றால் 'மண்' என்ற அதேபோன்ற ஒரு சொல் அந்தப் பொருளைக் குறிக்கவில்லை. இந்த வேறுபாட்டின் காரணமாகத்தான் இரண்டு சொல்லுக்குமே அர்த்தம் வந்து கூடுகிறது. மற்றப்படி, சொற்களுக்கும் அது குறிக்கும் பொருளுக்கும் எந்தக் காரண காரியத் தொடர்பும் இல்லை (Ambitirary) என்கிறார். இதை விளக்க அவரே புதிய கலைச்சொற்களை உருவாக்கிக் கொண்டார். சொல்லைக் குறிப்பான் (Signifier) என்றும் அதுகுறிக்கும் பொருளைக் குறிப்பீடு (Signified) என்றும் வழங்கினார்.

சசூரின் மொழிக் கொள்கையில் குறிப்பிடத்தக்க மற்றொன்று மொழிக்கிடக்கு (Langue) மற்றும் பேச்சு மொழி (Parole) குறித்த

கருத்தாக்கமாகும். அதாவது மொழிக்கிடங்கு என்பது மொழியின் ஒட்டுமொத்தமான அமைப்பைக் குறிக்கும். பேச்சுமொழி என்பது குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட சூழலில் மனிதன் பேசுவது; மொழிக்கிடங்கு உருவம் அற்றது. ஆனால் பேச்சுமொழி உருவம் கொண்டது. அதாவது விதிகளோடு கூடிய செஸ் விளையாட்டு ஒரு மொழிக்கிடங்கு என்றால் அவ்விளையாட்டில் ஒரு காயை நகர்த்துவது பேச்சு. அதுபோல இலக்கிய அழகியல் தத்துவம் ஒரு மொழிக்கிடங்கு என்றால் அவற்றின் அடிப்படையில் பிறக்கும் ஓர் இலக்கியப் பனுவல் 'பேச்சு' ஆகும். சசூர் மொழிக்கிடங்கிற்கு முதலிடம் கொடுத்தார். பேச்சை இரண்டாம் நிலையில் வைத்தார். இவ்வாறு சசூர் மொழியையும் மொழியின் செயல்பாட்டையும் ஓர் அமைப்பிற்குள் கொண்டு வந்து நிறுத்தினார். இத்தகைய மொழியியல் சிந்தனையில் இருந்துதான் அமைப்பியல் திறனாய்வும் உருவெடுத்தது என்பது ஆர்வம்தரத்தக்க ஒரு செய்தியாகும்.

## மரபார்ந்த மொழியியல் அணுகுமுறை

அமைப்பியல்வாதத்திற்கு முந்தைய காலகட்டங்களில் நிலவிய மொழியியல் அணுகுமுறைகள் இலக்கியத்தில் அமைந்துள்ள ஒலியியல், சொல்லியல், தொடரியல் என்ற முறையில் விளக்குவனாகவே இருந்து வந்துள்ளன. பேரா.முத்துச்சண்முகன், அகத்தியலிங்கம், செ.வை.சுப்பிரமணியம் முதலியோர் இத்தகைய அணுகுமுறைகளைக் கையாண்டு இலக்கியத்தின் செயற்பாட்டினை விளக்கியுள்ளனர். திறனாய்வுக் கலை எழுதியுள்ள பேரா.தி.சு.நடராசனும் உணர்ச்சிகளுக்கேற்ற ஒலிக்கோலங்கள் செய்யுளில் எவ்வாறு பயின்று வந்துள்ளன என்பதைச் சங்க இலக்கியக் குறுந்தொகைப் பாடல்களை எடுத்துக் கொண்டு, அப்பாடல்களில் பயின்று வரும் நெட்டெழுத்துக்கள், குற்றெழுத்துக்கள், மெல்லின ஒலிகள், வல்லின ஒலிகள், உயிரொலிகள், மெய்யொலிகள் முதலியவற்றைத் தனித்தனியாகப் பிரித்து வரைபடம் வரைந்து காட்டியுள்ளார். இவ்வாறு காட்டி விளக்குவதன் மூலம் இரண்டு பாடல்களின் நடையியல் பண்பு எவ்வாறு வேறுபட்டு விளங்குகிறது என எடுத்துக்காட்டுகிறார். யாப்பிலக்கண அணுகுமுறையிலும் இந்த 'ஒலியியல்' அணுகுமுறையே முன்னின்று வினைபுரிகிறது.

## புதைவடிவம்- புறவடிவம்

இலக்கியம் வார்த்தைகளால் ஆனது என்பது எவ்வளவு

உண்மையோ, அந்த அளவிற்கு உண்மை இலக்கியம் தொடரமைப்பினாலும் ஆனது என்பது. அலெக்சி டால்ஸ்டாய் என்ற இரசிய எழுத்தாளர் ஓரிடத்தில் இவ்வாறு எழுதுகிறார். "வார்த்தை ஒருவகையான காட்டு விலங்காகவே எனக்குத் தோற்றமளித்தது; அது என்னைக் கீழே தள்ளியது; எனக்குப் பணியாமல் முரண்டு பண்ணியது; புதர்க்காட்டிற்குள் என்னை இழுத்துச் சென்றது"[4]. மொழியோடு விளையாடுகிற அனைவருக்குமான அனுபவம்தான் இது. ஆனால் இந்த வார்த்தை எப்பொழுது பிடிக்குள் அகப்படுகிறது என்றால் அது தொடரமைப்புக்குள் வந்து சிக்கும்போதுதான். இவ்வாறு அடங்க மறுக்கும் சொற்களால் அமையும் ஒரு தொடர் (வாக்கியம்) பலவிதமான ஆழங்களையும் அடுக்குகளையும் கொண்ட புதிராகவே விளங்குகிறது என்கிறார் மாற்றிலக்கணக் கோட்பாடு என்னும் மொழியியல் கோட்பாட்டை வகுத்தளித்த நோம் சாம்ஸ்கி. அவர் தனது மாற்றிலக்கணக் கோட்பாட்டின் மூலம் தொடரமைப்பின் புரிதலுக்கு விளக்கம் தந்தார். ஒவ்வொரு தொடரிலும் இரண்டு விதமான அமைப்புகள் செயல்படுகின்றன என்றார். ஒன்று புறநிலைத்தொடர் (Surface Structure). மற்றொன்று புதைநிலைத்தொடர் (Deep Structure). அதாவது, வெளிப்படையாகத் தோன்றுவது புறநிலைத் தோற்றம். வெளிப்படையாகத் தோன்றாமல் உள்பொதிந்து கிடப்பது புதைநிலைத் தோற்றம். புதைநிலைத் தொடர்கள் அடிப்படையானவை. ஒரு புதைநிலைத் தொடரில் இருந்து பல புறநிலைத் தொடர்கள் தோன்றக்கூடும். இலக்கியப் படைப்பாளிகள், தொடரின் இந்தத் தன்மையைத்தான், தங்களின் மொழியை அழகுபடுத்தும் செயல்பாட்டிற்குப் பயன்படுத்திக் கொள்கின்றனர். அதாவது மொழியை அழகுபடுத்தும் செயல்பாடான உவமை, உருவகம், ஆகுபெயர், அன்மொழித் தொகை, உள்ளுறை, இறைச்சி, படிமம், குறியீடு முதலியவைகளைப் புதைநிலையாகப் பயன்படுத்தி, அவற்றிலிருந்து பல்வேறு புறநிலைத் தொடர்களை உற்பத்தி செய்து கொள்கின்றனர். இவ்வாறு மொழியையும் மொழித் தொடரையும் பயன்படுத்துகின்ற விதவிதமான தன்மை மூலமாகத்தான் இலக்கியத்தில் அழகியல் பிறப்பெடுக்கிறது என விளக்குகின்றனர் மொழியியல் அணுகுமுறைத் திறனாய்வாளர்கள்[5].

## மக்கள் மொழியா? இலக்கிய மொழியா?

மொழியியல் திறனாய்வு அணுகுமுறையில் அடிக்கடி எழுப்பப்படும் ஒரு சிக்கல், படைப்பாளி அன்றாடம் மக்கள் மத்தியில் உயிரோட்டமுடன் பேசப்படும் மக்கள் மொழியில் படைப்பதா? அல்லது கற்றவர் மொழி எனக் கருதப்படும் செவ்வியல் சார்ந்த புத்தக மொழியைப் பயன்படுத்துவதா?

என்பதாகும். பொதுவாகப் புத்தக மொழியானது மக்களுடைய மொழியிலிருந்து கூடுமானவரை மிகவும் விலகியே இருக்க முயற்சி செய்கிறது. மதம் மற்றும் அதிகாரம் எனும் சுமைகளைச் சுமந்து அலைகின்றதாக அது விளங்குகின்றது. ஆனால் மக்கள் பேசும் மொழியோ இயல்பாக இருக்கிறது; முனங்குகிறது; வெகுண்டு வெடிக்கிறது; கிண்டல் செய்து களிக்கிறது; பொய் சொல்லுகிறது; அச்சத்தினாலும் வேதனையினாலும் கதறுகிறது; மக்களை அப்படியே உயிரோட்டமுடன் பிரதிபலிக்கிறது; பெரும்பெரும் இலக்கிய ஆக்கத்திற்கென்றே தயாரிக்கப்பட்ட மொழி போல எளிமையானதாகவும் நுட்பமானதாகவும் இந்த மக்கள் மொழி அமைந்துள்ளது. எல்லாவற்றுக்கும் மேலாக, நிகழ்கணத்தில் வாழ்தல் என்பதற்கு மக்கள் மொழியே உகந்ததாக இருக்கிறது. இந்த மக்கள் மொழிதான் ஒரு பொருளை, அழகிய சொற்றொடராக மாற்றித் தருகிற வேதியியல் செயல்பாட்டினை நிகழ்த்திக் காட்ட வாய்ப்பாக அமைகின்றது. எனவேதான் தாகூர், பாரதியார் ஆகிய தேசிய இயக்கக் கவிஞர்கள் மக்கள் மொழி நோக்கித் தங்கள் படைப்புக்களை நகர்த்தியுள்ளனர். பாரதியார் "செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே" என்பது போன்று பல இடங்களில் மக்கள் மொழியாகிய பேச்சு மொழியைப் பயன்படுத்திக் கவிதையாக்கத்தில் வெற்றி பெற்றுள்ளார். இத்தகைய பார்வையை வளர்த்தெடுத்ததில் நவீன மொழியியல் கல்விக்குப் பெரும் பங்குண்டு என்பதில் இருவேறு கருத்து இருக்க முடியாது.

## மூலப்பாட ஆய்வும் மொழியியல் அணுகுமுறையும்

தமிழ் போன்ற ஏறத்தாழ 2,500 ஆண்டுக்கால இலக்கியப் பிரதிகளைக் கொண்டுள்ள பழமைமிக்க மொழிகளில் மூலப்பாடத் திறனாய்வு அடிப்படைத் தேவையாகிறது. மனித வாழ்க்கையில் அரசியல் மற்றும் பண்பாட்டு வரலாற்றில் ஏற்படும் பல்வேறு மாற்றங்களுக்கேற்ப இலக்கியப்பிரதியின் மூலங்களும் மாற்றத்திற்குள்ளாகின்றன. தமிழில் இத்தகைய மூலப்பாடச் சிதைவுகள் நடந்திருக்கின்றன என்பதை உரையாசிரியர்கள் எடுத்துக்காட்டுகின்ற பல்வேறு பாட வேறுபாடுகளைக் கொண்டே அறிந்து கொள்ளலாம். இத்தகைய நிலையில் சரியான மூலப்பாடத்தை மீட்டுருவாக்கம் செய்யவும், ஒரு நூலின் ஆசிரியர் குறித்துக் கருத்து வேறுபாடு எழுகின்ற போதும், குறிப்பிட்ட நூலின் காலம் பற்றிக் கணக்கிட முயலும் போதும் மொழி அடிப்படையிலான இந்த மூலப்பாடத் திறனாய்வு பெரிதும் பயன்படுகிறது. மேலும் ஒரே காலகட்டத்தில் தோன்றிய இலக்கியங்களிடையே நிலவும் பல்வேறு மொழி நடையைப் புரிந்து

கொள்ளவும், குறிப்பிட்ட ஒரு படைப்பாளியே வேறு வேறு மொழிநடைகளைப் பயன்படுத்தியிருக்கும் தன்மையை விளங்கிக் கொள்வதற்கும் இம்மூலப்பாடத் திறனாய்வு பெரிதும் பயன்படும் எனக் கருதலாம். பல்வேறு கபிலர், பல்வேறு ஔவையார் தமிழ் இலக்கிய வரலாற்றில் காணக்கிடக்கின்றனர். இவர்களின் காலத்தையெல்லாம் சரியாகக் கணிப்பதற்கு இவ்வாய்வு முறை பயன்படும் எனக் கருதலாம். கணினிகள் தோன்றிவிட்ட இக்காலகட்டத்தில் இத்தகைய ஆய்வுகளுக்கு நிறைய வாய்ப்புகள் கூடியுள்ளன. சான்றாக, சீன மொழியில் தோன்றிய முதல் புதினத்தின் பெயர் 'சிவப்பு அரங்கின் கனவு' (The Dream of the Red Chamber) என்பதாகும். பதினேழாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட இப்புதினத்தின் சில பகுதிகள், அதே புதினத்தின் பிற பகுதிகளோடு சரியாகப் பொருந்தவில்லை என்பதனால் அதன் ஆசிரியர் ஒருவர்தானா? என்ற ஐயம் எழுந்தது. இவ் ஐயத்தைப் போக்க முயன்ற ஆய்வாளர் ஒருவர், கணினி மூலம் அதன் சொற்களை ஆராய்ந்து அதை எழுதியவர் ஒருவர்தான் என்று நிறுவியுள்ளார். தமிழ்ச் சூழலில் இத்தகைய கணினி ஆய்விற்கு நிறைய வாய்ப்புகளிருப்பது சொல்லாமலே விளங்கும். இத்தகைய மூலப்பாடத் திறனாய்வுகள் நேரடியாக இலக்கியத்தன் அழகியல் சார்ந்த திறனாய்வோடு பொருந்தி வரவில்லை என்றாலும்கூட இலக்கியத்தின் மூலம் குறித்த சிக்கல்கள் எழும்போது மொழியியல் சார்ந்த இந்தத் திறனாய்வு முறை பெரிதும் பயன்படும்தானே.

## இலக்கியமும் வரலாற்று மொழியியலும்

மொழியியலின் ஒரு பெரும் பிரிவாக விளங்குவது வரலாற்று மொழியியல் கல்வி ஆகும். அதாவது மொழி காலந்தோறும் எவ்வாறு மாற்றத்திற்கு உள்ளாகி வந்துள்ளது என்பதை ஆராய்கிற ஒரு துறையாகும். சான்றாக, சங்ககாலத் தமிழ் வேறு; இடைக்காலத் தமிழ் வேறு; தற்காலத் தமிழ் வேறு என்று சொல்லும்படியாகத்தான் தமிழும் பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகி வந்துள்ளது. நடையில், யாப்பில், பிறமொழிக் கலப்பில் என்று பல்வேறு விதமாக மாற்றத்திற்கு உள்ளாகி இருப்பதோடு சொற்களின் பொருளிலும் பல மாற்றங்களைப் பார்க்க முடிகிறது. சான்றாக "நாற்றம்" என்ற சொல் திருக்குறள் காலத் தமிழில் "மணம்" என்கிற நல்ல பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

> "முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்
> வேல்உண்கண் வேய்த்தோள் அவட்கு" (குறள்.113)

என்கிற குறளில் 'நாற்றம்' என்ற சொல் 'மணம்' என்கிற பொருளில் பயன்படுத்தப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். இதுபோலவே சங்க காலத்தில் "காமம்" என்ற சொல் உயர்ந்த பொருளில் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் இருபதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட மொழி மாற்றத்தினால் திருக்குறளுக்கு உரை எழுதிய மு.வரதராசனார், 'காமத்துப் பால்' என்பதை 'இன்பத்துப்பால்' என்று மாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது. எனவே வரலாற்று மொழியியல் கல்வியை இலக்கியப் படைப்பாளிகளும், வாசகர்களும் அறிந்துகொள்ளும் போது இலக்கிய அழகியலின் தரமும் உயர்வதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது.

காலந்தோறும் தமிழ் எவ்வாறு மாறி வந்துள்ளது என்பதைத் தெ.பொ.மீனாட்சி சுந்தரனாரின் 'தமிழ்மொழி வரலாறு' என்ற நூல் விரிவாக விளக்குகிறது. மேலும் வி.ஐ.சுப்பிரமணியம், இராம.சுந்தரம், பொற்கோ, அகத்தியலிங்கம், மு.வ., செ.வை.சுப்பிரமணியம், கோதண்டராமன் முதலிய மொழியியல் அறிஞர்கள் விரிவாக ஆராய்ந்துள்ளனர்.

## இலக்கியமும் சமூக மொழியியலும்

மொழியியல் கல்வியில் மிக இன்றியமையாத ஒரு பிரிவு இச்சமூக மொழியியல் ஆகும். அதாவது ஒரு நாட்டில் பேசப்படும் ஒரு மொழி அந்நாட்டு மக்கள் அனைவராலும் ஒன்றுபோல் பேசப்படுவதில்லை. பல வேறுபாடுகள் காணப்படுகின்றன. அவ்வேறுபாடுகளைக் கீழ்க்கண்டவாறு வரிசைப்படுத்திக் கொள்ளலாம்.

1. உச்சரிக்கும் முறையில்
2. நீட்டி, குறுக்கி ஒலிக்கும் முறையில்
3. சொற்களுக்குப் பொருள் சொல்லும் முறையில்
4. புதிய சொற்களைப் பயன்படுத்தும் முறையில்

இவ்வாறு பல்வேறு முறையில் வேறுபடும் ஒரு மொழி பல்வேறு நிலையில் வேறுபடுகின்றன. அவைகளைக் கீழ்க்கண்டவாறு தொகுத்துக் கொள்ளலாம்.

1. வட்டாரத்திற்குத் தகுந்தவாறு
2. சாதி வேறுபாட்டிற்குத் தகுந்தவாறு
3. மத வேறுபாட்டிற்குத் தகுந்தவாறு

4. தொழில் வேறுபாட்டிற்குத் தகுந்தவாறு
5. கல்வி அறிவிற்குத் தகுந்தவாறு
6. வர்க்க வேறுபாட்டிற்குத் தகுந்தவாறு
7. தான் சேர்ந்த இயக்கத்திற்குத் தகுந்தவாறு

இவ்வாறு பல்வேறு நிலையில் ஒரு மொழி பலவிதமாக வேறுபட்ட நிலையில் பயன்பட்டுக் கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டு மக்களுக்கு ஒரே மொழி, தமிழ்மொழிதான் என்று சொன்னாலும்கூடத் தமிழ்நாடு முழுவதிலும் வழங்கப்படும் தமிழ், ஒரு தமிழ் அல்ல; கோவைத் தமிழ் வேறு; கன்னியாகுமரித் தமிழ் வேறு; சென்னைத் தமிழ் வேறு; கரிசல் காட்டுத் தமிழ் வேறு. எனவே, சமூக மொழியியல் ஆராய்ந்து கூறும் இத்தகைய மொழி குறித்த செய்திகளை எழுத்தாளர்களும் வாசகர்களும் அறிந்து கொள்ளும் போது மொழி வளம் கூடுவதோடு இலக்கியத் தரமும் மேன்மையுறும். தமிழில் இத்தகைய ஆய்வுகளை மேலே கூறிய மொழியியல் அறிஞர்கள் நிகழ்த்திக் காட்டியுள்ளனர். கரிசல் வட்டார மொழியைப் பயன்படுத்திப் புனைகதைகள் எழுதும் கி.இராஜநாராயணன் 'கரிசல் காட்டு வட்டார அகராதி' என்று ஓர் அகராதியைத் தயாரித்து நூலாக வெளியிட்டுள்ளார். பெருமாள் முருகன் 'கொங்குநாட்டு வட்டார அகராதி' தயாரித்துள்ளார். இதேபோல் அ.கா.பெருமாள் 'நாஞ்சில் நாட்டு அகராதி' வெளியிட்டுள்ளார். மொழியியல் சார்ந்த இத்தகைய வரவுகள் இலக்கியக் கல்வியைச் செழுமைப்படுத்தும் என்பதில் ஐயமில்லை. இதை உணர்ந்துதான் தமிழ் மரபில் சொற்களை வகைப்படுத்தும் போது இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என வகுத்துள்ளனர். இலக்கிய ஆக்கத்திற்கு இயற்சொல் மட்டுமல்ல; பல்வேறு காரணங்களால் திரிந்து ஒலிக்கக்கூடிய திரி சொற்களும், பல்வேறு வட்டாரங்களில் வழங்கப்படும் திசைச்சொற்களும், பிறமொழித் தொடர்பால் ஏற்படும் பிறமொழிச் சொற்களும் தேவைதான் என்பதை அன்றே உணர்ந்து செயல்பட்டுள்ளனர். எனவே இலக்கியத் திறனாய்வில் மொழியியல் கல்வி இன்றியமையாத இடத்தைப் பெற்று விளங்குகிறது.

---

## அடிக்குறிப்புகள்

1. ரெனிவெல்லாக் & ஆஸ்டின்வாரன், (மொ.பு) குளோறியா சுந்தரமதி, இலக்கியக் கொள்கை, ப.14.